## திராவிட இயக்க இதழ்கள் - 'நியூ டைம்ஸ்'

அனைவருக்குமான சமூகநீதி கோரி தொடங்கப்பட்ட நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவர், அந்தக் கட்சியின் சார்பில், சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்தவர், பொப்பிலி அரசர். இயற்பெயர் ராமகிருஷ்ண ரங்கா ராவ். அவர் சில காலம் நடத்திய இதழ் 'நியூ டைம்ஸ்'.

சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த இவர், 1932-ஆம் ஆண்டில் மாகாண முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். இந்திய நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

1934-ஆம் ஆண்டு, சட்டசபைத் தேர்தலில் நீதிக்கட்சி தோற்றதில் இருந்து, கட்சியின் உறுதித்தன்மை கேள்விக்குறியாக இருந்தது. நீதிக்கட்சியின் அதிகாரபூர்வ ஆங்கில பத்திரிகையான 'ஜஸ்டிஸ்' நிறுத்தப்பட்டது.

கட்சியின் இதழான 'ஜஸ்டிஸ்' இதழ் நிறுத்தப்பட்டாலும், சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை பார்ப்பனரல்லாதார் அரசியல் நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்றே வந்தன.

இந்த நிலையில், அவற்றைப் பதிவு செய்யும் வகையில், பொப்பிலி அரசர் தனது சொந்த பொறுப்பில் தொடங்கிய ஆங்கில இதழ் 'நியூ டைம்ஸ்'. இதுவும் சிறிது காலமே வெளிவந்தது.

## ஃப்ளாஷ்பேக்



### இனமானப் பேராசிரியரின் வாழ்த்து!



பாலசுப்ரமணியன்

1985-ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம், திட்டக்குடியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பேரூராட்சி மன்றத் தலைவர் சி.போ. சுப்பிரமணியன் அவர்களுக்கு, கழகப் பொதுச்செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சியில், 20 வயது இளைஞனாகக் கலந்துகொண்ட என்னை, பேராசிரியர் அவர்களிடம் அண்ணன் சுப்பிரமணியன் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது "கட்சிப் பணிகளைச் சிறப்பாக செய்யுங்கள்" என்று சொல்லி பேராசிரியர் வாழ்த்தினார். அந்தத் தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**- பாலசுப்ரமணியன்,**
**வார்டு துணைச் செயலாளர், கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### டாக்டர் அம்பேத்கர் அனைவருக்கும் பொதுவானவர்!

1958-ஆம் ஆண்டு சென்னை சேத்துப்பட்டில் அம்பேத்கர் நினைவு மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், பேரறிஞர் அண்ணா சிறப்புரையாற்றினார். 'டாக்டர் அம்பேத்கருக்கு நினைவுச்சின்னம் அமைக்க, சென்னையில் முயற்சி எடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டவர், "சென்னையில் நினைவுச் சின்னம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்தால், நானும் ஒத்துழைக்கத் தயார்" என்று முழுங்கினார். அம்பேத்கருக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என அன்று எழுப்பிய கோரிக்கையே, தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 2000-வது ஆண்டில் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபமாக உருவானது.

# மாநாடு

**ர.பிரகாசு** 42

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# போராட்டம் தொடர்கிறது!

1973-ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் நடைபெற்ற மாநாட்டில் கருஞ்சட்டைத் தொண்டர்கள் எவ்வித தியாகத்திற்கும் தயாராக வேண்டுமென்று அறைகூவல் விடுத்திருந்தார் பெரியார். அந்தத் தியாகத்துக்கு போராட்டத் திட்டம் வகுக்க, டிசம்பரில் 'தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு' மாநாட்டைக் கூட்டினார்.

சென்னை, வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் டிசம்பர் 8, 9 ஆகிய இரண்டு நாட்களில் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் அறிவிப்பு வெளியான நாள் முதலே வட இந்திய ஊடகங்களில் பெரியார் பேசுபொருளானார். சட்டமன்றத்தில் இம்மாநாடு குறித்து, விவாதிக்க வேண்டுமென்று, ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் வேன்கள், பேருந்துகள், ரயில்கள் மூலம் கருஞ்சட்டைப் படை, பெரியார் திடல் நோக்கிப் புறப்பட்டது.

"ஆயிரம் ஆயிரமாண்டு கால இன இழிவுச் சகதியிலே தலைப்பிரட்டைகளாக அழுந்திக் கொண்டிருந்த தமிழரினம் தலைதூக்க வந்துதித்த வைக்கம் வீரராம் நமது அய்யாவின் வாழ்நாளிலேயே சூத்திர துர்நாற்றத்தை, வீசியெறிய வீராவேசத்தோடு புறப்பட்டது வீரர் கூட்டப் பெரும்படை" என உணர்ச்சிப் பெருக்கோடு ஒவ்வொரு நிகழ்வையும் அச்சிலேற்றியது 'விடுதலை' ஏடு.

அனைவரையும் காணும் உற்சாகத்துடன் காலை 6 மணிக்கே தயாராக அமர்ந்திருந்தார் பெரியார். திருச்சி செல்வேந்திரன் கொடியேற்றி வைக்க, சிவகங்கை ஆர்.சண்முகநாதன் மாநாட்டைத் திறந்து வைத்தார். தென்னாற்காடு கு.கிருட்டிணசாமி பகுத்தறிவுக் கண்காட்சியைத் தொடங்கிவைத்தார். காலையில் மாநாட்டின் நோக்கங்களை விளக்கி ஆசிரியர் கி.வீரமணி நீண்டதொரு உரையாற்றினார்.





கூலிப்படைகள் கருப்புக்கொடி காட்டுவதைக் கண்டு, திரண்டெழுந்த கருஞ்சட்டைப் படையை ஆசிரியர் அமைதிப்படுத்துகிறார்.

மாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து, சிலர் கருப்புக்கொடி காட்ட பெரியார் திடல் நோக்கி வந்தனர். அதை அறிந்ததுமே, திராவிடர் கழகத் தொண்டர்களும் அப்பகுதியில் குழுமியதால், எதிரிகள் ஓட்டம் பிடித்தனர். காரின் மீது ஏறி நின்றவாறு, கருஞ்சட்டைத் தொண்டர்களை ஆசிரியர் கி.வீரமணி அமைதிப்படுத்தினார்.

*அரசியல் சட்டத்தில் மதச்சுதந்திர உரிமை என்றுள்ள பிரிவு 26-ஐ நீக்க வேண்டும், ஜாதி ஒழிப்புக்கு வழிவகை செய்யும் வகையில், திருத்தம் செய்ய வேண்டும்.

*மதம்- கடவுள் தொடர்பாக பிரச்சாரம் செய்கிற பத்திரிகைகளை, தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

*குடியரசுத் தலைவர், பிரதமர் போன்ற பதவிகள் வட நாட்டவருக்கு மட்டுமே கிடைப்பதை மாற்றி, அனைத்து மாநிலத்தவருக்கும் கிடைக்கும் வாய்ப்பை அரசியல் சட்டத்திலேயே உருவாக்க வேண்டும்" என்பது போன்ற பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மீண்டும் டிசம்பர் 19-ஆம் தேதி தியாகராய நகரில், "உங்களை எல்லாம் சூத்திரர்களாகவே விட்டுவிட்டுச் சாகப் போகிறேனே" என்று கடும் மன-உடல் வலியில் பேசினார்.**

இறுதியில், பேருரையாற்றிய பெரியார், "மாநாட்டுத் தீர்மானங்கள் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்படும். அதை நிறைவேற்ற டிசம்பர் 25 வரை கெடு. நிறைவேற்றாவிட்டால், 26-ஆம் தேதியை போராட்டத்திற்கு நிர்ணயித்துக் கொள்ளலாம். கலைஞர் கொண்டுவந்த 'அனைத்து ஜாதி அர்ச்சகர் சட்ட'த்தை செல்லாது என்று ஆக்கிவிட்டதில், நமக்கு ஆத்திரம் அதிகரித்துவிட்டது. பார்ப்பனர்களோடு போராடுகிற கடைசிப் போராட்டமாக இது இருக்க வேண்டும்" என்று கர்ஜித்தார்.

மீண்டும் டிசம்பர் 19-ஆம் தேதி தியாகராய நகரில்,"உங்களை எல்லாம் சூத்திரர்களாகவே விட்டுவிட்டுச் சாகப் போகிறேனே" என்று கடும் மன-உடல் வலியில் பேசினார். உடல்நலம் குன்றிய அடுத்த ஓரிரு நாளில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் பெரியார். ஆர்ப்பாட்டத்திற்கு நாள் குறித்த டிசம்பர் 26-ஆம் தேதிக்கு முன்பாக, 24-ஆம் தேதியே பெரியாரின் மூச்சோடு சேர்ந்து, அவர் சுற்றுப்பயணமும் நின்றது. ஆனாலும், அவர் ஊட்டிய சுயமரியாதை உணர்வு, அவர் விட்டுச்சென்ற போராட்டத்தைத் தொடர்கிறது.

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 42

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# மறக்க முடியாத மறைவு!

தந்தை பெரியாரின் வாழ்வையும் செயலையும் பற்றி விளக்கும் ஆயிரக்கணக்கான நூல்களை அறிவோம். ஆனால், அவரின் மறைவு நாளில், என்ன நிகழ்ந்தது என்பதை அறிவது, தமிழ்நாட்டில் அவர் எந்த அளவு நீக்கமற நிறைந்திருக்கிறார், என்பதைப் புரிந்துகொள்ள உதவும்.

**2005-இல் இந்நூல் வெளியானது. பல ஆண்டுகள் கழித்து, 552 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 'நிலா முற்றம்' பதிப்பக வெளியீடாக மறுபதிப்பு கண்டுள்ளது.**

அந்தப் பணியைச் செய்துள்ளார், எழுத்தாளர் காவிரிநாடன். அந்த நாளின் நிகழ்வுகளை, 'தந்தை பெரியாரின் இறுதி நாள்களும் இதழ்களும்' என்கிற தலைப்பில் பதிவுசெய்து, 2005-ஆம் ஆண்டு வெளியான அவரது நூல், தற்போது மறுபதிப்பு கண்டுள்ளது.



பெரியார் மறைந்த சமயத்தில், தமிழ்நாட்டு வெகுஜன நாளேடுகள் தொடங்கி வார இதழ்கள், பெரியாரின் இழப்பு குறித்த வேதனை வெளிப்பட்டுள்ளது.

இந்திய தேசியக்கொடி இரண்டு நாள்களுக்கு அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருக்கிறது. சினிமா அரங்குகள், சினிமா படப்பிடிப்புகள், அரசு நிகழ்ச்சிகள், போன்றவை எல்லாம் முழுவதுமாக நிறுத்தப்பட்டிருந்தன. தனியார் நிறுவனமான சிம்சன் நிறுவனம் விடுமுறை அளித்துள்ளது.

சிற்றிதழ்கள், ஆங்கிலப் பத்திரிகைகள் என அனைத்திலும் அவருக்கான அஞ்சலிக் குறிப்புகள் வெளிவந்தன. மலேசிய பத்திரிகையான 'தமிழ்நேசன்' உருக்கமான அஞ்சலிச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

அவை தொகுக்கப்பட்டு, பெரியாரிய செயற்பாட்டாளர் வே.ஆனைமுத்து அவர்களது முன்னுரையுடன் 2005-இல் இந்நூல் வெளியானது. பல ஆண்டுகள் கழித்து, 552 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 'நிலா முற்றம்' பதிப்பக வெளியீடாக மறுபதிப்பு கண்டுள்ளது.

அன்றைய இந்திய குடியரசுத் தலைவர் வி.வி.கிரி, பிரதமர் இந்திரா காந்தி, ஜெயபிரகாஷ் நாராயணன் தொடங்கி, இந்தியாவின் முக்கிய தலைவர்களிடமிருந்து பெரியாருக்கு அஞ்சலிக் குறிப்புகள் வெளிவந்த வண்ணம் இருந்துள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அரசியல் கட்சித் தலைவர்கள் முதல் கவிஞர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள், தொண்டர்கள், என சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்தும் 1974-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆண்டிதழ் 'டெக்கான் ஹெரால்ட்' இதழ் இந்தியா முழுக்க நடந்த முக்கிய நிகழ்வுகளை இந்திய வரைபடத்தில் குறித்துள்ளது, அதில் தமிழ்நாட்டில் பெரியாரின் மறைவை மறக்கமுடியாத நிகழ்வாகக் குறிப்பிட்டிருப்பது, அந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதத்தில் அமைந்துள்ளது.

அரைநூற்றாண்டுக்கும் மேல், தொடர்ந்து இயங்கிவந்த தந்தை பெரியார் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இந்திய அளவில், உலகளவில் எந்தளவுத் தாக்கம் செலுத்தினார் என்பதை அறிந்துகொள்ள இந்தப் பதிவுகள் உதவும்.


ஒரே செய்தியை வெவ்வேறு ஊடகங்கள் எப்படிப் பிரசுரிக்கின்றன என்பதையும், அவதானிக்க முடிகிறது. அஞ்சலிக் குறிப்புகள், இறுதி ஊர்வலம், வாழ்க்கை வரலாறு, கவிதை, கருத்துப் படம், ஓவியம், சுவாரசியமான நிகழ்ச்சிகள் என இந்நூல் முழுக்க பல முக்கியமான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**...வாசிப்போம்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

692

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131